20—

ESI மருந்தகம்

*63075—திரு. துரை. சந்திரசேகரன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, பூதலூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய காலை வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பூதலூரில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையால் அரசாணை வெளியிடப்பட்டு, மருந்தகம் துவக்குவதற்கு வாடகைக்குக் கட்டடம் தேர்வு செய்யும் பணி, புதுடில்லியில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மேற்படி புதுடில்லியிலுள்ள தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்திடமிருந்து 'அறிவிக்கை' கிடைக்கப்பெற்றவுடன் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் துவக்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். திருவையாறு தொகுதி, பூதலூரில் ESI மருந்தகம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே*

2020 செப்டம்பர் 16]

குறிப்பிட்டார்கள், உண்மைதான். அரசாணை வெளியிடப்பட்ட நாள் 27-10-2017. மூன்று ஆண்டுகள் ஆகப் போகின்றன. மூன்று ஆண்டுக்காலமாக ஒரு தாலுகாவில், ஒரு துறையின் மூலமாக ஒரு மருந்தகத்தை வாடகைக் கட்டடத்தில் அமைக்காமல் இருப்பதற்கு யார் காரணம்? எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தேதியைக் குறிப்பிடாமல், டெல்லியிலிருந்து அனுமதி வரவேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். மருத்துவமனை அமைப்பதற்குத்தான் மத்திய அரசிடமிருந்து அனுமதியைப் பெற வேண்டும். தமிழக அரசுதான் மருந்தகத்தை அமைக்க வேண்டும். மருந்தகம் அமைப்பதற்கு தமிழக அரசு அனுமதி வழங்கினாலே போதும். எனவே, அந்த மருந்தகத்தை விரைந்து அமைத்தால்தான் அப்பகுதியில் உள்ள, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மருந்துகளை எளிதாகப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அதற்காகத்தான் நான் இந்த வினாவினையே எழுப்பினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் மருந்தகம் அமைப்பதற்கு வாடகைக்குக் கட்டடங்கள் கிடைக்கவில்லை என்றாலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏராளமான கட்டடங்கள் உபயோகிக்கப்படாமல் பூட்டிக் கிடக்கின்றன. ஒரு மருந்தகம் அமைப்பதற்குத் தேவையான கட்டடங்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்பொழுது இந்த மருந்தகத்தைத் திறக்க ஆணையிடுவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் என்னும் கூட்டாண்மை அமைப்பால் நிருவகிக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, திருவையாறு தொகுதிக்குட்பட்ட பூதலூரில் E.S.I. மருந்தகம் துவக்குவதற்கு வாடகைக்குக் கட்டடம் தேர்வு செய்யும் பணி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்மூலம் மேற்கொள்ளப்பட்டு, மின் ஒப்பந்தம் கோரப்பட்டதில் இரண்டு கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஆனால், தேர்வு செய்யப்பட்ட இரண்டு கட்டடங்களும் முதல் மாடியில் இருப்பதால், காப்பீட்டாளர்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள் என்பதால் தவிர்க்கப்பட்டது. மேலும், மறு மின் ஒப்பந்தம் கோரப்பட்டு, வாடகைக்குக் கட்டடம் தேர்வு செய்யும் பணி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்மூலம்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொழிலாளர்களுக்கு மருத்துவச் சேவை வழங்குவதே மாநில அரசின் கடமையாகும். புதிய கட்டடங்களில் மருந்தகத்தை நிறுவுதல், கட்டடங்களைத் தேர்வு செய்தல், கட்டடங்களைக் கட்டுவது ஆகியவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் செயல்படுத்தப்படுகின்றன. மேற்கண்ட மருந்தகம் செயல்பட விரைவில் வாடகைக் கட்டடத்தினைத் தேர்வு செய்து தருமாறு மத்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திடம் வலியுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடங்கள் இருக்கின்றன என்று கூறியிருக்கின்றார். அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்தில் மருந்தகம் இயங்குவதற்கு அரசாணை போடப்பட்டு, மூன்று ஆண்டுகளாக புது டெல்லிக்கும், வேலைவாய்ப்புத் துறைக்கும் கடிதப் போக்குவரத்து இருப்பதை அறிந்துதான் நான் இந்த வினாவை எழுப்பினேன். பூதலூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏராளமான கட்டடங்கள் உபயோகப்படுத்தப்படாமல் பூட்டப்பட்டிருக்கின்றன. மருந்தகம் அமைக்க சிறிய இடம் போதும், பெரிய இடம் கேட்கவில்லை. E.S.I. மருத்துவமனைகளில், தொழிலாளர்களுக்கு E.S.I. cards கொடுப்பார்கள், அவர்கள் அதனைக் கொண்டு மருந்துகளை இலவசமாகப் பெற்றுச் செல்வார்கள். அது தொழிலாளர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். எனவேதான் புதிதாக வாடகைக் கட்டடங்களைத் தேடுவதைவிட, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உபயோகிக்காமல் பூட்டப்பட்டுள்ள கட்டடங்களில் மருந்தகத்தைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடங்கள் உபயோகிக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். அப்படியிருந்தால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, அலுவலர்கள் மூலமாகவும், துறை ரீதியாகவும் அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் அந்த மருந்தகம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 15 வரை)@

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 16)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

முற்பகல் 11–30

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கி மத்திய அரசின் அனுமதி பெற்று 1860 ஆம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டத்தில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வருதல் குறித்த சமூக நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

@ *257 முதல் 1598 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *1598 முதல் 1669 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*